# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, கடன் வழங்கு சபைகள் (நீக்கல்) சட்டம்

---

*[1986, செப்ரெம்பர் மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1986, செப்ரெம்பர் மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45

தபாற் செலவு : சதம் 75

## 1986 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, கடன் வழங்கு சபைகள் (நீக்கல்) சட்டம்

[1986, செப்ரெம்பர் 23 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**ச. வ.—ஓ. 36/85**

### 1975 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, கடன் வழங்கு சபைகள் சட்டத்தை நீக்குவதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1986 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, கடன் வழங்கு சபைகள் (நீக்கச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 1985 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

2. (1) இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "கடன் வழங்கு சபைகள் சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1975 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, கடன் வழங்கு சபைகள் சட்டமானது இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது. 1975 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதலும் பேணல்களும்.

(2) மேற்சொல்லப்பட்ட சட்டமானது நீக்கஞ் செய்யப்பட்டது எப்படியிருப்பினும்—

(அ) கடன்வழங்கு சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட கடன்வழங்கு சபைத் திணைக்களமானது, அத்திணைக்களத்தின் அலுவல்களை ஒடுக்கும் நோக்கத்துக்காக, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதிவரை தொடர்ந்து பணியாற்றிவருதல் வேண்டும்;

(ஆ) கடன் வழங்கு சபை ஒன்றினால் வழங்கப்பட்டனவும் இச்சட்டம் நடைமுறைக்கு வருந்தேதியன்று திருப்பிச் செலுத்தப்படாதிருப்பனவுமான கடன்கள், எத்திணைக்களத்துக்காக அக்கடன் வழங்கு சபையானது தாபிக்கப்பட்டதோ அத்திணைக்களத் தலைவரினால் அறவிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அரசாங்கத் திணைக்களம் ஒவ்வொன்றினதும் தலைவர் அத்திணைக்களத்திற்காகத் தாபிக்கப்பட்ட கடன் வழங்கு சபையினால் வழங்கப்பட்டனவும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று திருப்பிச் செலுத்தப்படாதிருப்பனவுமான கடன்களை அவற்றின்மீது செலுத்தற்படாற்பாலதான வட்டியுடன் சேர்த்து அறவிடுவதற்கும் அதனைத் திரட்டு நிதியத்தில் வரவுவைப்பதற்கும் இத்தால் தத்துவமளிக்கப்படுகின்றார்;

(இ) கடன் வழங்கு சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட கடன் வழங்கு சபைத் திணைக்களத்தினதும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று இருந்துவருவனவுமான பொறுப்புக்கள், அத்தேதிமுதல் திரட்டு நிதியத்துக்கு மாற்றப்பட்டிருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்;

2—ஏ 090570—2,890 (06/86)

(ஈ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று, கடன் வழங்கு சபைகள் சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் நிறுவப்பட்ட கடன் வழங்கு சபைத் திணைக்களத்தினது மத்திய நிதியத்தின் வரவில் இருக்கும் எல்லாப் பணங்களும், ஏதேனும் வங்கியில் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று, கடன் வழங்கு சபைகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் பேணப்பட்டுவரும் கடன் வழங்கு சபையின் அவ்வவ்விடத்து நிதியம் ஒவ்வொன்றினதும் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களும், திரட்டு நிதியத்துக்கு மாற்றப்பட்டனவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வங்கி ஒவ்வொன்றும் அத்தகைய பணங்களைத் திரட்டு நிதியத்தில் வரவுவைப்பதற்கு இத்தால் தத்துவமளிக்கவும் அதிகாரமளிக்கவும்படுகின்றது ;

(உ) (i) 1985 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பகிரங்க சேவையில் தொழில் பார்ப்பதிலிருந்து இல்லாதொழியும் உறுப்பினர் ஒருவரினால், கடன் வழங்கு சபைகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ், கடன் வழங்கு சபையொன்றுக்குச் செய்யப்பட்ட எல்லா உதவு தொகைகளும், பொது நிருவாக அமைச்சினால் அத்தகைய உறுப்பினருக்கு அல்லது அவரது சட்டப் பிரதிநிதிக்கு அவற்றின்மீதான பங்கிலாபங்களுடன் சேர்த்து மீளளிக்கப்படுதல் வேண்டும் ;

(ii) 1986 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் பகிரங்க சேவையில் தொடர்ந்திருந்துவரும் உறுப்பினர் ஒருவரினால் கடன் வழங்கு சபைகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் கடன் வழங்கு சபையொன்றுக்குச் செய்யப்பட்ட எல்லா உதவுதொகைகளும், எத்திணைக்களத்துக்காக அத்தகைய கடன் வழங்கு சபையானது தாபிக்கப்பட்டதோ அத்திணைக்களத்தின் தலைவரினால், இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் சாத்தியமாகக்கூடியளவு விரைவாக, அவற்றின்மீதான பங்கிலாபங்களுடன் சேர்த்து அத்தகைய உறுப்பினருக்கு அல்லது அவரது சட்டப்பிரதிநிதிக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும் ;

(iii) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட எல்லா மீளளிப்புக்களும் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*